KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# ரூ.5,655 கோடியில் திட்டங்கள் தொடங்கினார் பிரதமர்

## மேம்பட்ட இந்தியா, தமிழ்நாட்டை உருவாக்க உறுதி

**திருச்சி**

திருச்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், ரூ.5,655 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்டங்களைப் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அப்போது, “மேம்பட்ட இந்தியா, தமிழ்நாட்டை உருவாக்குவதுதான் எங்கள் இலக்கு” என்று பிரதமர் மோடி உறுதியாக கூறினார்.

கேரள மாநிலம் கொச்சியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பிரதமர் மோடி, நேற்று மாலை திருச்சி வந்தடைந்தார். விமான நிலையத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பின்னர் திருச்சியை அடுத்த பஞ்சப்பூரில் நேற்று மாலை நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்று ரூ.5,655 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்தார்.

சென்னை மணலியில் உள்ள இந்தியன் எண்ணெய் நிறுவனத்தின் சார்பில் ரூ.490 கோடியில் மசகு எண்ணெய் தயாரிப்பு ஆலையை (நவீன லூப் ப்ளெண்டிங் ஆலை) நாட்டுக்கு அர்ப்பணித்தார். நீலகிரி, ஈரோடு மாவட்டங்களில் 9 லட்சம் வீடுகளுக்கு ரூ.3,685 கோடி மதிப்பில் குழாய் மூலம் எரிவாயு விநியோகம் செய்யும் திட்டத்துக்கு அவர் அடிக்கல் நாட்டினார். நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமப்புற இணைப்புகள் துறை சார்பில் பிரதமர் கிராம சடக் யோஜனா திட்டத்தில் ரூ.300 கோடியில் 307 கி.மீ. கிராமப்புற சாலைகளைப் பிரதமர் திறந்து வைத்தார். தேசிய நெடுஞ்சாலை 81-ல் கல்லகம் மீன்சுருட்டி- கங்கைகொண்ட சோழபுரம் வரை 7 கி.மீ. தொலைவுக்கு ரூ.183 கோடியில் தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் பணியையும் அவர் தொடங்கினார்.



திருச்சியில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் ரூ.5,655 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்த பிரதமர் மோடி. உடன், மத்திய அமைச்சர்கள் பியூஷ் கோயல், எல்.முருகன், தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு, பாஜக சட்டப்பேரவைக் குழுத் தலைவர் நயினார் நாகேந்திரன்.

ரயில்வே துறையில் நாகர் கோவில் - சர்லாபள்ளி அம்ரித் பாரத் விரைவு ரயில், போத்தனூர் (கோவை) - தன்பாத் அம்ரித் பாரத் விரைவு ரயில், ராமேசுவரம்- மங்களூரு விரைவு ரயில், திருநெல்வேலி-மங்களூரு விரைவு ரயில், மயிலாடுதுறை- திருவாரூர் - காரைக்குடி ரயில் ஆகிய 5 ரயில் சேவைகளை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

விழாவில் பிரதமர் மோடி பேசியதாவது:

இந்த நிகழ்ச்சி தமிழக எதிர்காலத்துக்கு முக்கியமான ஒன்று. ரூ.5,655 கோடி மதிப்பிலான இந்தத் திட்டங்கள் தூய்மையான எரிசக்தி, பெட்ரோல் தொடர்பான தயாரிப்பு, நெடுஞ்சாலைகள், ரயில்வே துறை, ஊரகப் பகுதி சாலைகள் தொடர்பானவை. இதனால், தமிழகத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் நகர எரிவாயு பகிர்மான கட்டமைப்பின் ரூ.3,700 கோடி மதிப்பிலான திட்டம், ஈரோடு - நீலகிரி மாவட்ட மக்களுக்கு பயனளிக்கும். ஒன்பது லட்சம் குடும்பங்களுக்கும், நூற்றுக்கணக்கான வர்த்தக நிறுவனங்களுக்கும் குழாய் வழி இயற்கை எரிவாயு கொண்டு சேர்க்கும். இயற்கை எரிவாயு, காற்று மாசை குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும். எட்டு ஆண்டு காலத்தில் இந்த திட்டத்தால் சுற்றுச்சூழலும், காற்றும் 4 கோடி மரங்கள் நடுவதற்கு சமமானது.

மணலியில் அர்ப்பணிக்கப்பட்டுள்ள மசகு எண்ணெய் ஆலை, உலகில் மிகப்பெரிய ஆலைகளில் ஒன்றாக உள்ளது. இது உள்ளூர் மட்டத்திலான தயாரிப்புகளை அதிகரிப்பதுடன், இறக்குமதியை குறைத்து தேசத்தின் பணத்தை சேமிக்கிறது.

தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ள ஊரக பகுதி சாலைகளால் கிராமப்புற மக்கள் கல்வி, மருத்துவம், விவசாயிகள் விளைப் பொருட்களை ஏற்றிச் செல்ல உதவும்.

கடந்த ஆண்டு ஆடித் திருவாதிரை விழாவுக்காக கங்கை கொண்ட சோழபுரம் வந்தது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மாமன்னர் ராஜேந்திர சோழன் எழுப்பிய மகத்தான ஆலயத்தின் கட்டுமானத்தின் ஆயிரமாவது ஆண்டு தொடக்கத்தை கொண்டாடினோம். இது யுனெஸ்கோ அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட இடம். தற்போது அங்கு நெடுஞ்சாலைக்கான அடிக்கல் நாட்டியுள்ளோம். தற்போதுள்ள நெடுஞ்சாலை ஆலயத்தின் அருகில் இருப்பதால் பக்தர்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் இடையூறாக உள்ளது. எனவே, இந்த புதிய சாலை அதற்கு தீர்வாக அமையும்.

கடந்த வாரம் மதுரை வந்த போது அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் 8 நவீன மறுவடிவமைக்கப்பட்ட ரயில் நிலையங்களை தொடங்கி வைத்தேன். இன்று பல புதிய ரயில் சேவைகள் தொடங்கிவைத்துள்ளேன். இதன் மூலம் சுற்றுலா துறை மேம்படுவதுடன் உள்ளூர் பொருளாதாரத்துக்கு ஊக்கமளிக்கப்பட்டு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். மேம்பட்ட இந்தியாவை உருவாக்க, மேம்பட்டதொரு தமிழ்நாட்டை உருவாக்குவது தான் எங்கள் இலக்கு. தமிழக மக்கள் நலனுக்கு முழு அர்ப்பணிப்போடு மத்திய அரசு செயல்படுகிறது.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

முன்னதாக மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் வரவேற்று பேசியது:

பிரதமர் மோடி வரும்போதெல்லாம் ரூ.6,000 கோடி நிதியிலான திட்டங்களை தமிழகத்துக்கு அர்ப்பணித்து வருகிறார். கடந்த 1-ம் தேதி தமிழகம் வந்த பிரதமர் மோடி ரூ.5,600 கோடிக்கான திட்டங்களையும், இன்று ரூ.5,655 கோடி மதிப்புள்ள திட்டங்களையும் வழங்கி உள்ளார். கடந்த 12 ஆண்டுகளில் ரூ.13 லட்சம் கோடியை தமிழக வளர்ச்சிக்கு பிரதமர் மோடி கொடுத்துள்ளார். தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலாச்சாரம், இலக்கியம், திருவள்ளுவரை உலகம் முழுவதும் கொண்டு சென்ற பெருமை பிரதமர் மோடியை சாரும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, பாஜக சட்டப் பேரவைக் குழுத் தலைவர் நயினார் நாகேந்திரன், திருச்சி ஆட்சியர் வே.சரவணன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

**பொது அறிவு :** புறநானூற்றில் 65 துறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. புறத்திணைகளின் உட்பிரிவான துறைகள் வழியாக தமிழர் வாழ்வியல் விளக்கப்படுகிறது. முக்கிய துறைகளில் அரசவாகை, ஆனந்தப் பையுள், இயன்மொழி, உண்டாட்டு மற்றும் மூதின்முல்லை போன்றவை குறிப்பிடத்தக்கவை.

# முதியோர் நலனுக்கு முன்னுரிமை அளிப்போம்!

இந்தியாவில் 60 வயதைக் கடந்த மூத்த குடிமக்களின் எண்ணிக்கை 2011 நிலவரப்படி 10 கோடியாக இருந்த நிலையில், 2036இல் அது இரண்டு மடங்கு அதிகரித்து 23 கோடியைத் தொடும் என மக்கள்தொகைக் கணிப்பு அறிக்கையில் (Technical Group on Population Projections) கூறப்பட்டுள்ளது. இதன்படி, 10 ஆண்டுகள் கழித்து இந்திய மக்கள்தொகையில் 15 சதவீதத்தினர் அதாவது, ஏழு பேரில் ஒருவர் 60 வயதைக் கடந்தவராக இருக்கும் நிலை ஏற்படும்.

அதேபோல, சுகாதாரம் - குடும்ப நல அமைச்சகத்தின் சார்பில் வயது முதிர்வு குறித்து எடுக்கப்பட்ட நீண்டகால ஆய்வின்படி, 2050இல் இந்தியாவில் முதியோரின் எண்ணிக்கை 31 கோடியாக உயரும் எனத் தெரியவந்துள்ளது. இந்த அசாதாரண உயர்வு, முதியோருக்கான சமூகப் பாதுகாப்பு வாழ்வாதார உரிமைகள், மருத்துவச் சேவை, நலத்திட்டங்கள் போன்றவற்றின் அவசியத்தை உணர்த்தியிருக்கிறது.

ஒருபக்கம் நாட்டின் மொத்தக் கருவள விகிதம் குறைந்திருக்கும் நிலையில், மறுபக்கம் முதியோர் எண்ணிக்கை உயர்ந்திருப்பது கவனிக்கத்தக்கது. வயதுவாரியான மக்கள்தொகையில் சமச்சீரின்மை நிலவும் அதேநேரம், மூத்த குடிமக்களின் எண்ணிக்கை உயர்வும் நாடு முழுவதும் சீராக இல்லை. எடுத்துக்காட்டாக, கேரளத்தில் 2011இல் 13 சதவீதமாக இருந்த முதியோர் எண்ணிக்கை 2036இல் 23 சதவீதமாக உயரும். இதன் மூலம் நாட்டிலேயே மிக அதிக எண்ணிக்கையில் முதியோரைக் கொண்ட மாநிலமாக கேரளம் மாறும். இமாச்சலப் பிரதேசம், பஞ்சாபைத் தவிர்த்துப் பெரும்பாலான வட இந்திய மாநிலங்களில் முதியோர் எண்ணிக்கை குறைவு.

இந்தியச் சமூகம், முதியவர்களுக்கு மதிப்பளிக்கும் சமூகம் என்று சொல்லப்பட்டாலும், புறக்கணிப்புகளுக்கும் அவமதிப்புகளுக்கும் குற்றச்செயல்களுக்கும் முதியோர் இலக்காவது தொடர்கிறது. இத்தகைய சூழலில், முதியோர் நலத்திட்டங்களை முழுவீச்சில் அரசுகள் மேம்படுத்த வேண்டும். அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது அரசின் கடமை மட்டுமல்ல; சமூகத்தின் பொறுப்பும்கூட.

முதியோரில் பாலின விகிதம் 1,065 பெண்களுக்கு 1,000 ஆண்கள் என்கிற அளவில் இருக்கிறது. இவர்களில் 54% பெண்கள் கணவரை இழந்தவர்கள். பொதுவாகவே, ஆண்களை நம்பி வாழும் வகையில் பெண்கள் இருக்கிற சூழலில், தனித்து வாழும் பெண்களின் நிலை கவலைக்குரியதாக மாறுகிறது. தனிக்குடும்பங்கள் பெருகிவிட்ட நிலையில், பெரும்பாலான முதியோர் தனித்து வாழும் நிலையே நீடிக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை வேலைக்குச் செல்லும் 100 பேரை 62 பேர் சார்ந்திருக்கிறார்கள். இதையும் அரசுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2007இல் நிறைவேற்றப்பட்ட மூத்த குடிமக்களின் பராமரிப்பு - நலச் சட்டம், மாவட்டம்தோறும் முதியோர் இல்லங்களை மாநில அரசுகள் நடத்த வேண்டும் என்கிறது. ஆனால், பெரும்பாலான மாநிலங்களில் அது முறையாகச் செயல்படுத்தப்படவில்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முதியோர் ஊக்கத்தொகை, மக்களைத் தேடி மருத்துவம், வீடு தேடி ரேஷன் பொருள்களை வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கைவிடப்பட்ட முதியோருக்குத் தங்குமிடங்களை வழங்கும் பூஞ்சோலைத் திட்டம் போன்றவை செயல்படுத்தப்படுகின்றன. பயனாளர்கள் அனைவருக்கும் இவை எவ்விதத் தடையுமின்றிக் கிடைப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

இன்று இந்தச் சமூகம் அடைந்திருக்கும் நிலைக்குத் தங்கள் உழைப்பை நல்கிய முதியோரைப் பாதுகாப்பதோடு, இந்தச் சமூகத்தில் அவர்கள் சுயமரியாதையோடு வாழ்வதற்கான வழிகளை ஏற்படுத்தித் தர வேண்டியது மத்திய – மாநில அரசுகளின் கடமை. குடும்பங்களுக்கும் சமூக அமைப்புகளுக்கும் இதில் கூடுதல் பொறுப்பு உண்டு!

**பொது அறிவு:** இந்தியாவின் தேசிய மரம் ஆலமரம் (Banyan Tree) ஆகும். நீண்ட ஆயுள் மற்றும் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் அதன் கிளைகள் மற்றும் விழுதுகளுக்காக, இந்தியாவின் கலாச்சார, ஆன்மிக மற்றும் இயற்கை பாரம்பரியத்தின் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

# சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிரான தீர்மானம் தோல்வி

**புதுடெல்லி**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியடைந்தது.

மக்களவையில் கடும் அமளி மற்றும் முழக்கங்களுக்கு இடையே, அவையை நடத்திக் கொண்டிருந்த ஜெகதாம்பிகா பால், சபாநாயகரை நீக்கக் கோரும் தீர்மானம் தோல்வியடைந்ததை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். முன்னதாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர்.

தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த ஒத்துழைக்குமாறும், உறுப்பினர்கள் தங்களது இருக்கைகளுக்குத் திரும்புமாறும் ஜெகதாம்பிகா பால் வேண்டுகோள் விடுத்தார். எனினும், அமளி தொடர்ந்ததால் குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மக்களவை மற்றும் மாநிலங்களவை அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

**அமித் ஷா தாக்கு**

விவாதத்தின் போது பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தியை கடுமையாக விமர்சித்தார். அப்போது அவர் கூறுகையில், “ ராகுல் காந்தி கட்சிப் பணிகளுக்காகப் பல்வேறு இடங்களுக்கு, வெளிநாடுகளுக்கு செல்கிறார். ஆனால் குடியரசுத் தலைவர் உரை, மத்திய பட்ஜெட் தாக்கல் மற்றும் 370-வது சட்டப் பிரிவு தொடர்பான முக்கிய விவாதங்களின் போது ராகுல் காந்தி அவையில் இருப்பதில்லை. முக்கியமான கூட்டத் தொடர்களின் போது வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டு, பின்னர் தமக்கு பேச வாய்ப்பளிக்கப்படுவதில்லை என்று குற்றம் சாட்டுகிறார். மக்களவையைப் பொருத்தவரையில் காங்கிரஸ் 175 மணி நேரத்துக்கும் மேலாக பேசியுள்ளது. அப்போது எந்த சபாநாயகர் உங்களை தடுத்தார்?



ஓம் பிர்லா

17-வது மக்களவையில் ராகுல் காந்தியின் வருகை 51 சதவீதமாகவும் (சராசரி 66%), 16-வது மக்களவையில் 52 சதவீதமாகவும் (சராசரி 80%) மட்டுமே இருந்துள்ளது. கடந்த 75 ஆண்டுகால வரலாற்றில் சபாநாயகருக்கு எதிராக 3 முறை மட்டுமே நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. பாஜக அல்லது தேஜ கூட்டணி சார்பில் ஒரு முறை கூட சபாநாயகருக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படவில்லை.

இவ்வாறு மத்திய அமைச்சர் அமித் ஷா கூறினார்.

அமித் ஷாவின் இந்தப் பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்த எதிர்க்கட்சியினர், அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என முழக்கங்களை எழுப்பினர்.

எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியடைந்ததை தொடர்ந்து, இத்தனை நாட்களாக சபை நடவடிக்கையில் இருந்து விலகியிருந்த சபாநாயகர் ஓம் பிர்லா இன்று முதல் சபையை வழிநடத்த உள்ளார். எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் குறித்து இன்று அவர் அறிக்கை அளிக்கவும் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னதாக செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தின் போது, துணை சபாநாயகர் பதவி காலியாக இருப்பது, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் மைக்கைத் துண்டிப்பது மற்றும் உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக இடைநீக்கம் செய்யப்படுவது போன்ற செயல்கள் சபாநாயகர் நடுநிலை தவறுவதை உணர்த்துகிறது என்பது உள்ளிட்ட பல்வேறு புகார்களை எதிர்க்கட்சித் தலைவர்கள் முன்வைத்து அமளியில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

# தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது பதவிநீக்கத் தீர்மானம்

## திரிணமூல் காங்கிரஸுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு

**புதுடெல்லி**

மேற்கு வங்க மாநிலத்தில் வரும் ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதை முன்னிட்டு கடந்த ஆண்டு டிசம்பரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள்(எஸ்ஐஆர்) தேர்தல் ஆணையத்தால் மேற்கு வங்கத்தில் தொடங்கப்பட்டன.

இந்நிலையில் இந்த எஸ்ஐஆர் பணியில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும், இதற்குத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார்தான் காரணம் என்றும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி புகார் கூறி வருகிறது.

இதைத் தொடர்ந்து அவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தை திரிணமூல் காங்கிரஸ், மாநிலங்களவையில் கொண்டு வரும் என்று கட்சி எம்.பி. சவுகதா ராய் நேற்று அறிவித்தார். எஸ்ஐஆர் பணியின் காரணமாக 59 லட்சம் உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன என்றும் அவர் புகார் தெரிவித்தார்.



ஞானேஷ்குமார்

இந்நிலையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் முடிவை வரவேற்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர் உதித் ராஜ், எம்.பி. சுக்தேவ் பகத் உள்ளிட்டோர் தெரிவித்துள்ளனர். திரிணமூல் காங்கிரஸ் கொண்டு வரும் தீர்மானத்துக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆதரவு அளிக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பூர்ணியா தொகுதி சுயேச்சை எம்.பி.யான பப்பு யாதவ், சமாஜ்வாதி எம்.பி. தர்மேந்திர யாதவ் உள்ளிட்டோரும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அதேநேரத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் முடிவுக்கு பாஜக மூத்த தலைவர்கள் அனுராக் தாக்குர், முக்தார் அப்பாஸ் நக்வி, மத்திய அமைச்சர் சுகந்தா மஜும்தார் உள்ளிட்டோர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# கோமாவில் 13 ஆண்டாக இருப்பவரை கருணை கொலை செய்ய உச்ச நீதிமன்றம் அனுமதி

## மருத்துவ உபகரணங்களை நீக்க உத்தரவிடுவது இதுவே முதல்முறை

**புதுடெல்லி**

டெல்லி அருகே காஜியாபாத் பகுதியை சேர்ந்தவர் ஹரிஷ் ராணா. சண்டீகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பி.டெக் படித்து வந்தார்.

இவர் தங்கியிருந்த விடுதியின் 4-வது மாடியிலிருந்து கடந்த 2013, ஆகஸ்ட் 20-ம் தேதி தவறி விழுந்தார். இதில் அவருக்கு நரம்பிழைத் தண்டில் காயம் ஏற்பட்டது. சிகிச்சைக்குப் பிறகும் நினைவு திரும்பாத நிலையில், மருத்துவ ரீதியில் உணவும், நீரூட்டமும் அளித்தும் தொண்டையில் சுவாச குழாய் பொருத்தியும் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. படுத்த படுக்கையாக இருக்கும் அவருக்கு இடையில் வலிப்பு நோய், படுக்கைபுண் ஏற்பட்டு அதற்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

13 ஆண்டுகளாகப் பல்வேறு சிகிச்சைகள் அளித்தும் நினைவு திரும்பாததை கருத்தில் கொண்ட பெற்றோர்கள் மகனை கருணைக் கொலை செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, கே.வி.விஸ்வநாதன் அடங்கிய



ஹரிஷ் ராணா

அமர்வு விசாரித்தது. இந்த விவகாரத்தில் நோயாளி ஹரிஷ் ராணாவின் உடல் நிலையை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட முதல்நிலை, 2-ம் நிலை மருத்துவக் குழுக்களும் மருத்துவ ரீதியில் உணவும் நீரும் அளித்து வருவதை நோயாளியின் நலன் கருதி விலக்க வேண்டும் என்று பரிந்துரைத்தன.

இதைக் கருத்தில் கொண்ட உச்ச நீதிமன்றம் நேற்று அளித்த தீர்ப்பில் கூறியிருப்பதாவது: ஹரிஷ் ராணாவின் உடல்நிலையை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட முதல்நிலை, 2-ம் நிலை மருத்துவக் குழுக்களும் உயிர் காக்கும் கருவிகளை விலக்க பரிந்துரைத்த பிறகு, நீதிமன்றம் தலையிட வேண்டிய அவசியம் எழவில்லை. இருப்பினும் முதல் நிகழ்வு என்பதால், நோயாளிக்கு பொருத்தப்பட்ட உயிர் காக்கும் கருவிகளை கண்ணியத்துடன் விலக்க வேண்டும்.

முதல்நிலை, 2-ஆம் நிலை மருத்துவக் குழுக்கள் பரிந்துரைத்து, இதுபோன்ற உயிர் காக்கும் கருவிகளை விலக்கி கருணைக் கொலை செய்யக் கோரும் விவகாரத்தில், காமன் காஸ் வழக்கின் தீர்ப்பின் வழிகாட்டுதல்களை பின்பற்றி மருத்துவமனைகளிடம் இருந்து தகவல்களைப் பெற வேண்டும் என்று அனைத்து நீதித்துறை நடுவர்களுக்கும் உயர் நீதிமன்றங்கள் உத்தரவிட வேண்டும்.

கருணைக் கொலை விவகாரத்தில் பரிந்துரைகளை அளிக்க அனைத்து மாவட்டங்களிலும் முதல்நிலை, 2-ம் நிலை மருத்துவக் குழுவுக்குப் பதிவுபெற்ற மருத்துவர்களின் பட்டியலை மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி பராமரிப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். கருணைக் கொலை விவகாரத்தில் மத்திய அரசு விரிவான சட்டம் இயற்ற பரிந்துரைக்கிறோம்.

இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

### கருணை கொலையில் 2 வகை

குணப்படுத்த முடியாத நோயால் நீண்டகாலம் அவதிப்படும் நோயாளியை, அவருக்கு வழங்கப்படும் உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களை நீக்குவதன் மூலம் அல்லது மருத்துவ சிகிச்சைகளை நிறுத்துவதன் மூலம் தாமாக உயிரிழக்கச் செய்வது 'பாசிவ் யூதனேசியா' எனப்படும் கருணைக் கொலையாகும். இதை உரிய வழிகாட்டுதல்களுடன் மேற்கொள்ள சட்டப் பூர்வ அனுமதி உண்டு.

இதுபோன்ற நோயாளிகளை நோயிலிருந்து நிரந்தரமாக விடுவிக்கும் வகையில் உயிரிழக்கச் செய்யும் மருந்தை ஊசி மூலம் மரணமடையச் செய்வது 'ஆக்டிவ் யூதனேசியா'. மற்றொரு வகை கருணைக் கொலையாகும். இந்த நடைமுறை இந்தியாவில் சட்ட விரோதமாக கருதப்படுகிறது.

# இந்தியாவின் எரிவாயு தேவையை பூர்த்தி செய்யத் தயார்

## கனடா பிரதமர் மார்க் கார்னி தகவல்

டொரான்டோ

இந்தியாவின் அதிகரித்து வரும் எல்என்ஜி எரிவாயு தேவையைப் பூர்த்தி செய்யத் தயாராக இருப்பதாக கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமர் மார்க் கார்னி எக்ஸ் சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

வரும் 2040-ம் ஆண்டுக்குள் இந்தியாவின் எரிவாயு தேவை இரு மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எரிசக்தி வல்லரசு என்ற முறையில் இந்தியாவின் அதிகரித்து வரும் எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய கனடா தயாராக உள்ளது. உலகின் மிகக் குறைந்த கார்பன் வெளியேற்றம் கொண்ட மற்றும் நம்பகமான முறையில் உற்பத்தி செய்யப்படும் திரவ இயற்கை எரிவாயுவை (எல்என்ஜி) வழங்க தயாராக உள்ளோம்.

ஆசியா மற்றும் ஐரோப்பா முழுவதும் வெப்பமாக்கல், மின்சாரம் மற்றும் தொழில்துறை பயன்பாட்டுக்கு இது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர்ச் சூழல், கத்தாரில் இருந்து வரும் எரிவாயு விநியோகத்தைப் பாதித்துள்ளதால், அதன் விலை உயர்ந்திருப்பதுடன், விநியோகத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

வரும் 2030-ம் ஆண்டு இறுதிக்குள் தனது புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை 500 ஜிகா



வாட்டாக அதிகரிக்கவும், தங்கள் நாட்டின் முதன்மை எரிசக்தி கலவையில் எல்என்ஜி-யின் பங்கை கிட்டத்தட்ட இருமடங்காக உயர்த்தவும் இந்தியா திட்டமிட்டுள்ளது. இதற்கு கனடா உறுதுணையாக இருக்கும்.

உற்பத்தி, தூய்மையான தொழில்நுட்பம் மற்றும் அணுசக்தி திட்டங்களுக்காக இந்தியா முக்கியமான தாதுப் பொருட்களைத் தேடும் வேளையில், கனடாவின் வளங்கள் மற்றும் முன்னணி நிறுவனங்கள் ஒரு சிறந்த கூட்டாளியாக அமையும். உலகில் உள்ள சுரங்க நிறுவனங்களில் 40 சதவீதம் கனடாவில் பட்டியலிடப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கச்சா எண்ணெய், எல்பிஜி, எல்என்ஜி அல்லது யுரேனியம் என கனடா எதை வழங்கினாலும் வாங்க இந்தியா தயாராக இருப்பதாக கடந்த மாதம் தகவல் வெளியானது. அதே நேரம், வேகமாக வளர்ந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ஒப்புதல் நடைமுறைகளை கனடா எளிதாக்க வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது.

ஈரான் - இஸ்ரேல் போர், மத்திய கிழக்கு நாடுகளின் நிலைமை, ஹார்முஸ் ஜலசந்தி மூடல் மற்றும் எரிசக்தி விலை உயர்வு குறித்து பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் ஆலோசித்த பிறகு, கார்னி இந்த வீடியோவைப் பகிர்ந்துள்ளார். முன்னதாக திங்கள்கிழமை அன்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்புடனும் அவர் இது குறித்து விவாதித்திருந்தார்.

## மத்திய கிழக்குப் பகுதியில் போர் மூண்டால்

# இந்தியாவில் சமையல் காஸ் விலை உயர்வது ஏன்?

புதுடெல்லி

அமெரிக்கா-இஸ்ரேல், ஈரான் போர் காரணமாக இந்தியாவில் காஸ் சிலிண்டர் விலை கடந்த 7-ம் தேதி உயர்த்தப்பட்டது. டெல்லியில் மானியம் இல்லாத சிலிண்டருக்கு (14.2 கிலோ) ரூ.913-ஆக உயர்த்தப்பட்டது. அதேபோல் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர்கள் விலையும் ரூ.1,883-ஆக அதிகரித்தன.

இந்தியாவில் 33 கோடிக்கும் அதிகமான வீடுகளில் சமையல் காஸ் சிலிண்டர்(எல்பிஜி) பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஈரான்-இஸ்ரேல் போர் தீவிரமடைந்து வருவதால் அங்கிருந்து வரும் சப்ளை முற்றிலுமாக நிறுத்தப்பட்டு விட்டது. கத்தார் உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் சமையல் காஸ் விநியோகம் முற்றிலும் குறைந்துவிட்டதால், எல்பிஜி விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டின் மொத்த எல்பிஜி தேவையில் சுமார் 60% அளவுக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, குவைத் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இந்த நாடுகளில் இருந்து கச்சா எண்ணெயானது மிகப்பெரிய சரக்குக் கப்பல்கள் மூலம் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியாவுக்குக் கொண்டு வரப்படுகிறது. தற்போது போர் மூண்டுள்ளதால் ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இயக்கப்படும் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தும் என எச்சரித்துள்ளதால் அந்தக் கப்பல்கள் அங்கேயே நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இந்தியாவில் எல்பிஜி சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நெருங்கியுள்ளது.

நமது நாட்டில் உள்நாட்டு எல்பிஜி சிலிண்டர் நுகர்வு கடந்த பத்தாண்டுகளில் மிகவும் உயர்ந்துள்ளது. 2016-17-ம் ஆண்டில் 21.61 மில்லியன் டன்னிலிருந்து நிதியாண்டு 2025-ல் 31.32 மில்லியன் டன்களாக நுகர்வு உயர்ந்துள்ளது. ஒட்டுமொத்தமாக, இந்தியாவின் எல்பிஜி பயன்பாடு 10 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 43% அதிகரித்துள்ளது.